REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 24௳ திங்கள் (9—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 25௳ செவ்வாய் (10—9—57) [இதழ் 74

ரூ. 476 கோடி கடன் வாங்க இந்தியா விரும்புகிறதாம்!

புதுடில்லி, செப். 9—

அடுத்த மூன்றுண்டுகளில் 100-கோடி டாலர் (ரூ. 476 கோடி) மேற்கத்திய நாடுகளிலிருந்து பெற இந்தியா விரும்புகிறதாம்! இத்தகவலை 'நியூயார்க் டைம்ஸ்' இதழ் வெளியிட்டிருக்கிறது.

இதில், 50 அல்லது 60 கோடி டாலரை ஐக்கிய அமெரிக்கா நாட்டிடமிருந்தும், மீதியை பிரிட்டன், சர்வதேச பாங்கு, மற்றும் தனிப்பட்ட பாங்குகளிடமிருந்தும் கடன் வாங்க இந்தியா கருதியிருக்கிறதாம்!

'மதுவிலக்கு' அரோகரா-ஒரிசாவில் துவக்கம்!

பஞ்சமாபாதகம் செய்தாகிலும்....!

பண்டிதர் திட்டம் வெற்றிபெற வேண்டுமாம்!

'பஞ்சமாபாதகம்' செய்தாகிலும் பண்டித நேருவின் ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிபெறச் செய்தாக வேண்டும் என்று 'பெரிய தலைகள்' தீர்மானித்துவிட்டன என்று தெரிகிறது.

அதிலும் குறிப்பாக, 'பஞ்சமாபாதகத்'திலே மிஞ்சியதாம் 'குடி'யை, மீண்டும் புகுத்துவது பற்றி இப்போது வெளிப்படையாகவே, வெட்கமின்றி பேசத் தலைப்பட்டுவிட்டார்கள்.

மதுவிலக்குத் திட்டத்தை 'ரத்து' செய்துவிடப் போவதாகவும், மீண்டும் கள், சாராயக் கடைகளைத் திறந்து 'வருமானம்' தேடப் போவதாகவும், அந்த வருமானத்தைக்கொண்டு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்குப் பணம் தேடிக்கொள்ளப் போவதாகவும் ஒரிசாவிலிருந்து செய்தி கிளம்பியிருக்கிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்காகத் தனது வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக மதுவிலக்குத் திட்டத்தை நீக்கிவிட, ஒரிசா சர்க்கார் தீவிரமாக யோசித்துவருகிறது என்று **கட்டாக்** செய்தியொன்று, பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒரிசாவில் துவக்கி, பிறகு, இதே காரணத்துக்காக எல்லா 'ராஜ்யங்களி'லும் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்துவிடுவது காங்கிரஸ் சர்க்காரின் எதிர்கால நடவடிக்கையாக இருக்குமென்று அஞ்சப்படுகிறது.

ராஜ்குமாரி அமிர்தகௌர் அம்மையார், வெளிப்படையாகவே 'மதுவிலக்குத் திட்டம் தோற்றுவிட்டது; ரத்து செய்துவிட வேண்டியதுதான்' என்று பேசுகிறார்கள்.

மற்றப் 'பெரியவர்கள்', இவ்வளவு வெளிப்படையாகப் பேசாமல் 'நாசூக்காக' காரியத்தை முடிக்க விரும்புவதாகத் தெரிகிறது.

ஒரிசாவிலேதான் முதன்முதலாக மதுவிலக்குத் திட்டம் 'அரோகரா' ஆகும்போலிருக்கிறது!

புதுடில்லியில் ஊரடங்கு உத்தரவு

இந்தி ஆதரவாளர்—எதிர்ப்பாளர் கைகலப்பின் விளைவு

புதுடில்லி, செப். 9—

புதுடில்லியின் தெற்குப் பகுதியிலுள்ள ஜக்பூரா, போகல் காலனிகளில் நேற்று மாலை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தி பாதுகாப்பு இயக்கத்தினருக்கும் — எதிர்ப்பாளர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாகவே இவ்வூரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏற்பட்ட கலவரத்தின் விளைவாக, போலீஸ் சூப்பிரண்டெண்டு உட்பட சில கான்ஸ்டபிள்களுக்கும் காயமேற்பட்டுள்ளது.

சென்னைக்கு டில்லிப் பேரரசு இழைக்கும் மற்றொரு துரோகம்

ஏழைகட்கு உதவும் நியாய விலைக் கடைகளுக்கு அரிசி இல்லையாம்!

மாநில சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டுமாம்

சென்னை, செப். 9—

வெளிநாடுகளிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ள அரிசியை சென்னை மாநிலத்திலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புவது இனி நிறுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தற்பொழுது மாநில முழுவதிலும் 1,000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இறக்குமதி மூலம் கிடைக்கும் அரிசி இக்கடைகள் மூலம் நியாய விலைக்கு—குறிப்பாக ஏழை மக்களுக்கே விற்கப்படுகின்றது.

அரிசியின் விலை நியாயமான அளவுக்கு இறங்கும் வரை, இந்த நியாயவிலைக் கடைகளைத் தொடர்ந்து நடத்துவதென மாநில சர்க்கார் கருதியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், இந்தக் கடைகளுக்கு அரிசி வழங்க வேறு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்வது என்பது பற்றி இப்பொழுது விவாதிக்கப்பட்டுவருகிறது.

ஏழைமக்களுக்கு இத்தகைய கடைகள் மிகவும் இன்றியமையாத் தேவையென மத்திய அரசு கருதினால், மாநில சர்க்கார் இக்கடைகளைத் தொடர்ந்து நடத்த மத்திய சர்க்கார் ஆதரவளிக்குமாம். ஆனால், மாநில சர்க்காரே அரிசி விநியோகத்திற்கான மார்க்கத்தைக் கண்டறியவேண்டுமாம்! மத்திய அரசு அரிசி கொள்முதல் செய்தளிக்காதாம்!

மாநில சர்க்கார் தென் மண்டலத்திலுள்ள—குறிப்பாக ஆந்திர உபரி அரிசியைக் கொண்டே சமாளிக்க வேண்டியுள்ளது.

ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்து பற்றுக் குறைப் பகுதிகளுக்கு வழங்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்க மத்திய அரசு வட்டார உணவு அதிகாரிக்குத் தெரியப்படுத்தி யிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு

காரைக்குடி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

காரைக்குடி, செப். 6—

இந்தியை ஆட்சி மொழியாக்கும் வெறிப்போக்கிற்குக் கண்டனம் தெரிவித்து, காரைக்குடி கல்லூரி மாணவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

'இந்தியைத் திணிக்காதே! இந்தியை ஆட்சி மொழியாக்காதே' என்ற விளம்பரத் தட்டிகளுடன் காரைக்குடி கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

ஊர்வலம் நகரின் முக்கியத் தெருக்களின் வழியாகச் சென்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியபின் கலைந்தது.

மாணவர்கள் இன்று வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

வீதிகளின் பெயர்களை மாற்றுவதற்குத் திட்டம்

புதுடில்லி, செப். 7—

டில்லியில் உள்ள நெடுஞ்சாலைகள், மற்றும் வீதிகள், சந்துகள் முதலியவற்றின் பெயர்களை இந்தியமயமாக்குவதற்கான திட்டம் உருவாகி வருகிறது என்று மத்திய மருத்துவ அமைச்சர் கார்மார்கர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

திட்டமாம் -- திட்டம்!

ரூ. 1,47,502 கையாடிய பேர்வழிக்குத் தண்டனை

அம்பாலா, செப். 9—

வடநாட்டில் உருவாக்கப்பட்டுள்ள பக்ரா-நங்கல் அணைத் திட்டத்தில் அதிகாரியாகபொறுப்பேற்று இருந்த வடவர் சர்தார் சஜன் சிங், மற்றும் இரண்டு கண்காணிப்பாளர்கள் இலஞ்சம் வாங்கியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆறுமாதம் முதல் ஓராண்டு காலம் வரை, அம்பாலா நீதிமன்ற நீதிபதி செயின் அவர்களால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சர்தார் சஜன் சிங்குக்கு மொத்தம் ரூ. 1,47,502 மதிப்புள்ள சொத்து இருந்ததாம்; அது எப்படிக் கிடைத்தது என்பதை அவர் சரியாக விளக்கவில்லையாம்!

எறும்பு வளையில் உள்ள அரிசியை எடுத்து உண்ணுகிறார்கள்!

சாத்தூர் வட்டார ஏழைமக்களின் பரிதாப நிலை

சாத்தூர், செப். 3—

எறும்பு வளைகளைத் தோண்டி அவற்றினுள் எறும்புகளால் சேகரித்துவைக்கப்பட்டிருக்கும் அரிசியை எடுத்து சமைத்துண்ணும் நிலையில் இங்கு சிலர் கடந்த சில திங்களாகக் காலந்தள்ளி வருகின்றனர்.

சாத்தூரிலுள்ள ஏழை விவசாயப் பெண்கள் பலர் மண்வெட்டியும், முறமும் கையிலேந்தி சாரை சாரையாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி, 'நீங்கள் இப்படி எங்கு செல்கிறீர்கள்?' எனக் கேட்ட போது, அவர்களில் ஒரு பெண்மணி கூறியது மிகவும் வியப்பையும், வேதனையையும் அளித்தது.

"நாங்கள் இரண்டு மாத காலமாக இதேபோல வெளியிலே சென்று உழுது பாழடைந்த வரப்புக்களில் உள்ள எறும்பு வளைகளை ஆழமாக வெட்டி அவற்றில் காணப்படும் பலவிதத் தானியங்களையும் சேகரிக்கின்றோம். இப்படிச் சேகரிப்பதற்கு நடுப்பகல் 1 மணியாகி விடுகிறது; ஒரு மைல் சுற்றளவு தோண்டினால் சுமார் ஒரு படி தானியமாவது கிடைக்கும்; அந்தத் தானியத்தைத்தான் சமைத்துச் சாப்பிடும் நிலைமையை 'ஆண்டவன்' எங்களுக்கு எழுதி விட்டான்"

என, உருக்கமாக அந்தப் பெண்மணி கூறியிருக்கிறார்.

மாநில அரசாங்க பஸ்போக்குவரத்துத் துறையின் கன்னியாகுமரி கிளை, ஜூலையில் ரூ. 2,01,564 வருமானம் பெற்றது. 6,98,388 பிரயாணிகள் சுமார் 2,28,416 மைல் பிரயாணம் செய்துள்ளனர்.

அல்சீரியாவுக்கு சுதந்தரம் கிடையாதாம்!

பிரான்சின் ஏகாதிபத்திய உறுமல்!

புதுடில்லி, செப். 9—

"அல்சீரியப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதில் பிரான்சுக்கு விருப்பந்தானும்; ஆனால், முழுச் சுதந்தரம் அளிப்பதற்கில்லையாம்!

ஓரளவுக்குக் குடியாசு நிலையை மட்டும் அல்சீரியாவுக்கு பிரான்சு வழங்கக்கூடுமாம்!

பண்டித நேரு, டாக்டர் இராதாகிருட்டினன் போன்றவர்களிடம் இந்தக் கருத்துக்களைப் பிரெஞ்சு வெளிநாட்டு இலாகா செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் விபத்தில் நஷ்ட ஈடு

மக்கள் சபையில்: தகவல்

புதுடில்லி, செப். 7—

"அரியலூர் இரயில் விபத்து சம்பந்தமாக ரூ. 8,00,852·87 காசுகள் நஷ்ட ஈடு தொகையாகவும், ரூ. 1,34,785·60 காசுகள் கைம்மாறு தொகையாகவும் தரப்பட்டுள்ளது" என்று, மக்கள் சபையில் இரயில்வே உதவி அமைச்சர் ஷா நவாஸ்கான் தெரிவித்துள்ளார்.

விபத்தில் இறந்தவர்கள் சார்பில் 161 மனுக்கள் விசாரிக்கப்பட்டு 19 தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எஞ்சிய 142 மனுக்களுக்கு நஷ்ட-ஈடு தரப்பட்டது என்றும் அமைச்சர் அறிவித்தார்.

காயமுற்றவர்கள் 89 பேர் மனு செய்துக்கொண்டதில் மூவரைத் தவிர மற்ற 86 பேர்களுக்கும் நஷ்டஈடு தரப்பட்டதாம்.

சொத்து பறிபோனதாக 13 பேர் மனு செய்துக்கொண்டதில் 4 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு 9 பேர்களுக்கு நஷ்டஈடு தரப்பட்டதாம்.

மொத்தம் 263 மனுக்கள் நஷ்டஈடு கோரி வந்ததில் 28 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும், 237 மனுக்கள் சம்பந்தமாக நஷ்டஈடு தரப்பட்டுள்ளது என்றும்அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள்

சென்னை, செப். 9—

இராணுவத்தினருடையவும், அவர்களைச் சேர்ந்தவர்களுடையவும் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகளை, 1957—58-ம் ஆண்டு காலத்திற்கு அரசாங்க நிதியிலிருந்து வழங்கும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. நடைமுதல் கல்வி ஆண்டுக்குப் பின்பு இந்தச் சலுகை நீடிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—9—57 திங்கள்

யானைகண்ட குருடர்கள்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 2,000 கோடி செலவில், நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட பின்னரும், இன்று உணவுப் பிரச்சினையை, வெளிநாட்டு உதவியின்றி சமாளிக்கும் நிலை காணப்படவில்லை. பணம் கொடுத்து வாங்குவதானாலும் உணவுப் பற்றாக்குறையை ஈடுசெய்ய, வெளிநாடுகளிலும் வசதியில்லை என்ற அவலநிலை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 4,800 கோடி செலவில் நாட்டைத் தொழில் மயமாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு ஓராண்டு காலம் முடிந்துவிட்டது; ஆனால், திட்டம் திட்டப்பட்டவாறு நிறைவேற்றப்படுவதற்குப் போதிய நிதி வசதி உண்டா என்பதற்குத் தெளிவான விளக்கம் காணப்படவில்லை.

ஓராண்டு காலத்திற்குள் உள்ள நிலைமையை ஆராய்ந்து மொத்தம் ரூ. 6,000 கோடி தேவைப்படும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்தறிவித்துள்ளனர். இப்போது மத்திய நிதி அமைச்சர், திட்டத்திற்கு ரூ. 5,500 கோடி தேவைப்படும் என்று திட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

மக்கள்மீது வரி விதிக்கப்பட்டபோது பண்டித நேருவும் நிதி அமைச்சரும், 'திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்; நிதி வசதி பெருகவேண்டும்' என்றனர்; 'திட்டத்தைக் குறைக்கவும் முடியாது—காலத்தை நீடிக்கவும் முடியாது' என்று பிடிவாதமாகப் பேசினர்; 'திட்டம் முதலில்—பிறகு மக்கள்' என்று கூறினார் பண்டித நேரு; ஆனால், அதே திட்டத்தை அமுல் நடத்தும் நிலை இந்தியப் பேரரசுக்கு இல்லை என்ற நிலை தெளிவாகிவிட்டது.

மூன்று நாட்களுக்கு முன்பு குழுவிடம் நிதி அமைச்சர் அறிவித்த கருத்துக்களிலிருந்து அவர், திட்டத்தைக் குறைத்தும் திருத்தி அமைத்தும் உள்ளார் என்ற உண்மை வெளிப்படுகிறது.

ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு ரூ. 4,800 கோடிக்கு திட்டத்தைக் குறைத்தும், மாற்றியும் அமைத்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மாற்றம் நாட்டின் பெரிய தொழிற்சாலை அமைப்புகளைப் பாதிக்காதாம். மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களிலும் அதிக மாற்றம் இருக்காதாம். மற்ற திட்டங்களைப்பற்றி இந்திய அரசாங்கம் என்ன செய்ய முடிவு செய்துள்ளது என்பதை, அவர்கள் கூறாமலே மக்கள் உணர்வர்.

இப்போது இந்தியப் பேரரசு மனதில்கொண்டுள்ள திட்டத்திற்கேனும் போதிய நிதி வசதி உண்டா என்பதற்கும் விளக்கமும், புள்ளிவிவரங்களும் வெளியிடப்படவில்லை. பொதுப்படையாக அகில இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவில்பேசியுள்ளனரே தவிர, புள்ளிவிவரங்களுடன் விளக்கம் காணப்படவில்லை.

இப்போது ரிசர்வ் பாங்கி, 'திட்டத்தில் தனியார் துறை, அரசாங்கத் துறை பற்றி உடனடியாக ஆராயவேண்டும்' என்றும், 'நாட்டில் பணவசதி மிகக் குறைந்துள்ளது' என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

'அளவுக்கு மீறி அந்நியச் செலாவணி ஓராண்டுக்காலத்தில் குறைந்துவிட்டது' என்று பொருளாதார நிபுணர்கள் முன்பே எச்சரித்துள்ளனர். இன்று பண்டித நேரு, 'அமெரிக்கா அந்நிய செலாவணி வசதியைத் தரவேண்டும்' என்று கோரி, 5,000 இலட்சம் டாலர் உதவி கேட்டுள்ளார்; நிதி அமைச்சரும் பணம் தேட வெளிநாடுகள் செல்ல முடிவு செய்துள்ளார்.

நாட்டில் விலைவாசிகள் உயர்ந்துள்ளது. வாழ்க்கைத் தாம் அதிகரித்துள்ளது. வரிக் கொடுமையும் அளவிற்கு அதிகமாக இருக்கிறது

உள்நாட்டில் எதிர்பார்த்த அளவு நிதி வசதி கிடைப்பதாகவும் காணப்படவில்லை என்பது சமீபத்தில் நிதி அமைச்சர் கூறியதிலிருந்து தெரியவருகிறது. 'தனியார் துறையும் கடன்வசதி பெற்றே இயங்க விரும்புகிறது' என்று அவரே கூறியுள்ளார்.

நாட்டு மக்களிடை, 'இப்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சேமிப்புத் திட்டத்தின் மூலம் நிதி வசதியை அதிகரிக்க இந்தியப் பேரரசு கருதுவது ஒரு சோதனையாகும்' என்ற பலமான கருத்து நிலவுகிறது.

திட்டம் தீட்டப்பட்ட நேரத்தில் சுமார் ரூ. 1,200 கோடிக்கு எந்தவித ஏற்பாட்டையும் இந்தியப் பேரரசு செய்யவில்லை. மொத்தத்தில் திட்டம் தீட்டினார்களே தவிர, அதற்கான சாதக சூழ்நிலையைப் பற்றி சிந்திக்கத் தவறிவிட்டனர் என்பது இப்போது வெளிப்படுகிறது.

திட்டமே, 'விந்தை உலகில் சிறுமி அலைஸ்' என்ற கதைப் போன்றதாக உள்ளது. திட்டத்தில் எதைத்தான் நிச்சயம் நிறைவேற்ற இந்தியப் பேரரசு உறுதி கொண்டுள்ளது என்று பார்த்தால், 'அடிப்படைத் (Core) திட்டங்களை மட்டும் தான்' என்று, நிதி அமைச்சர் பேச்சிலிருந்து கருதவேண்டியுள்ளது.

இந்த அடிப்படைத் திட்டங்கள் எவை என்பதுபற்றி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தெளிவுபடுத்தவில்லை. பாராளுமன்றத்தில் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் அனுமதி கேட்டதே தவிர, அடிப்படைத் திட்டங்கள் எவை என்று அறிவிக்கவில்லை.

'நிலக்கரி, எஃகு, மின்சாரம், போக்குவரத்து ஆகியவைதான் திட்டத்தின் அடிப்படை' என்று இப்போது நிதி அமைச்சர் கூறுகிறார். 'கல்வி, சமூக சேவை ஆகியவைதான் திட்டத்தின் அடிப்படை' என்று திட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் நிதி அமைச்சராக இருந்த தேஷ்முக் கூறியுள்ளார். இப்படி, அடிப்படைத் திட்டங்கள் பற்றி கருத்து வேற்றுமை நிலவுகிறது. இந்த நிலையில் மக்களின் நிதியைச் செலவிடும் அரசாங்கம், திட்டவட்டமாகப் புள்ளிவிவரங்களுடன் திட்டத்தின் மாற்றங்களை அறிவித்து, திட்டத்தின் அடிப்படையை விளக்கவேண்டியது கடமையாகும்.

'திட்டத்தை எப்படியும் நிறைவேற்றித் தீரவேண்டும்; அதற்காக மக்கள் தியாகம் புரிய வேண்டும்' என்று பேசியவர்கள், திட்டத்தின் எல்லா இலக்குகளையும் அடைய முடியாது என்ற நிலையை இப்போது உணர்ந்தது கண்டு மக்கள், எதிர்காலத்தில் என்ன நடைபெறுமோ என்று குழப்பமடைவதும் இயற்கையேயாகும்.

திட்டத்தைக் காலத்திற்கு ஏற்றவாறும், நிதி நிலைமைக்கு ஏற்றவாறும், சூழ்நிலைக்கு ஏற்றவாறும் மாற்றம் செய்துகொள்வதில் பின்வாங்கிய இந்தியப் பேரரசுக்கு, இப்போது ஒரு நல்ல பாடம் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யானையைக் கண்ட குருடர்கள் வர்ணித்த கதைபோல், இன்று, திட்டத்தைப் பற்றி பலர் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

'மைசூர் மாநிலம் திட்டத்தைக் குறைத்துக்கொள்ளாது'

முதலமைச்சர் நிசலிங்கப்பா அறிவிப்பு

சென்னை, செப். 6—

"மாநில சீரமைப்பு காரணமாக மைசூர் மாநிலம் பாதிக்கப்பட்டுள்ளது; எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழுள்ள எந்தத் திட்டத்தையும் மைசூர் மாநிலம் குறைத்துக் கொள்ள முடியாது"

—என்று, மைசூர் முதலமைச்சர் நிசலிங்கப்பா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

தென் பகுதியில் உள்ள மைசூர் நிலையைப்பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது, 'மைசூர் மாநிலம் பின்தங்கிய பகுதிகளைக் கொண்டது. திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட எந்த இனத்தையும் குறைத்துக்கொள்ளவோ, விட்டுவிடவோ இயலாத நிலை உள்ளது' என்றார்.

"திட்டத்தை அமுல் செய்வதிலுள்ள நெருக்கடியையும், மத்திய அரசின் நிலையையும் மைசூர் நன்கு அறிந்துள்ளதுபோலவே, அவர்களும் மைசூரின் அவல நிலையை அறிந்திருப்பார்கள் என்றே நிச்சயமாக நம்புகிறேன். மேலும் திட்டக்குழுவிடம் மைசூர் மீண்டும் தனது நிலையை வலியுறுத்தும்" என்றார்.

"உணவுத் துறையில் மைசூர் ஓர் பற்றாக்குறைப் பகுதியாகும். நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பதற்கு இப்போது மைசூர் உறுதி கொண்டுள்ளது" என்றார்.

நீர்விசை மின்சாரத் திட்டங்களுக்குத் தேவையான அந்நியச் செலாவணி வசதி இருப்பதால் திட்டங்களை நிறைவேற்றத் தடை ஏதும் இராதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

★

'சூழ்நிலைக்கு ஏற்றவாறு திருத்திக்கொள்ள வேண்டும்'

மைசூர் மாநிலத்தை மத்திய நிதி அமைச்சர் கோருகிறார்

புதுடில்லி, செப். 6—

"திட்டம் வகுப்பது ஒரு தொடரான முறையாகும்; அதற்கு வரம்பு கிடையாது. அதைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் வரிசைக்கிரமத்திற்கு ஏற்றவாறும் மாற்றவோ அதிகப்படுத்தவோ குறைக்கவோ திருத்தவோ நாம் முன்வர வேண்டும்" என்றும் 'மைசூர் மாநிலம் தன் திட்டத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்' என்றும் மத்திய நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

அந்தமான் தீவில் முதல் பெண் பள்ளி

அந்தமான் தீவில் பெண்களுக்கென ஓர் பள்ளிக்கூடம் துவங்க இந்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது என்றும், இதுவே அங்கு ஏற்படும் முதல் பெண் பள்ளிக்கூடம் என்றும் மக்கள் சபையில் மத்திய உதவி கல்வி அமைச்சர் ரேணுசக்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

போலந்து எழுத்தாளர்களின் பரிதாப நிலைமை!

டோக்கியோ, செப். 8—

"போலந்தில் எழுத்தாளர்களுக்குஎவ்வித சுதந்திரமுமில்லை; அவர்களுக்கு நியாயம் வழங்கப்படுவதில்லை; கொடுமைப்படுத்தப்படுகின்றனர்; கட்டாயப்படுத்தப்படுகின்றனர்" என்று இங்கு நடைபெற்ற உலக எழுத்தாளர் கூட்டத்தில் போலந்து பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

இந்தக் கூட்டத்திற்கு 70 வெளிநாட்டு எழுத்தாளர்களும், 200 ஜப்பான் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

போலந்தில் ஓவியர்களும், எழுத்தாளர்களும், ஸ்டாலின் காலத்தில் கடுமையாக ஒடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டனர் என்றும், மீண்டும் அதே நிலை ஏற்படாது என்று உறுதி கூறுவதற்கில்லை என்றும் போலந்து பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

"ஸ்டாலின் தலைமையின் கீழ் பொதுவுடைமைத் தலைவர்கள் ஒரு பழிவாங்கும் பேய்க் கூட்டமாக விளங்கினர்; இப்போது போலந்தில் எழுத்தாளர்களுக்கு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. ஆனால் இதே நிலை நீடித்து இருக்கும் என்று உறுதியளிப்பதற்கில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

'இந்தியாவின் எதிர்காலம் கிராமங்களில் இல்லை'

'ஆயுர்வேத வைத்திய முறைக்கா ஆதரவு?'

'தவறான தேசீயம்' தெரிந்த பணிக்கர் பேச்சு

லண்டன், செப். 6—

இந்தியாவின் தூதுவராக பிரான்ஸ் நாட்டில் உள்ள சர்தார் கே. எம். பணிக்கர், தன் சொந்த வேலையின்பொருட்டு லண்டன் சென்றாராம்; அங்கு இந்திய மாணவர்கள் நிறுவனத்தில் அவர் பேசுகையில் தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

"நிலையான ஒரு புதிய சமுதாயத்தை கிராமங்களில் உருவாக்க முடியாது. கிராமங்களில் அதற்குரிய காலம் முடிந்துவிட்டது. நவீனமாக்கும் கொள்கையை இன்றைய இந்தியத் தலைவர்கள் உறுதியாகப் பின்பற்றிவருகிறார்கள்" என்று அவர் மாணவர்களிடை பேசுகையில் தெரிவித்துள்ளார்.

"ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் ஏற்பட்ட கலாச்சாரத் தொடர்பின் காரணமாகப் போற்றத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசியாவின் புதிய கலாச்சாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் இது துவக்கமாகும்.

"கடந்தகாலப் பெருமைகளைப் பற்றிப் பேசிவருவதானது, தேய்ந்துவரும் ஒரு நாட்டின் பண்பாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ஆயுர்வேத மருத்துவ முறைக்கு ஆதரவளிப்பதைக் கண்டித்துக் குறிப்பிட்டதாவது:—

"மருத்துவத்துறையில் மேலை நாட்டு முறை—கீழை நாட்டு முறை என்று பாகுபடுத்துவது கூடாது; மருத்துவம் என்பது உலகம் முழுவதற்கும் சொந்தமாகும்; விஞ்ஞான அடிப்படையில் பிணியைப் போக்க முயற்சிப்பதே அவசியமானது; எனவே ஆயுர்வேத முறை முன்னேற வேண்டும் என்று கருதுவது தவறான தேசீய உணர்ச்சியின் அடிப்படையில் உருவானதாகும்."

1,000 மைல் நீளமுள்ள நெடுஞ்சாலை!

திபெத்திலிருந்து—சீனவரை அமைக்கப்பட்டுள்ளதாம்!

பிகிங், செப். 8—

மேற்கு திபெத்திலிருந்து கோபி பாலைவனம் வழியாகவும், காரகோரம் மலை வழியாகவும் மேற்கு சீனாவரை சுமார் 1 000 மைல் நீளத்திற்கு நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு, அடுத்த திங்களில் போக்குவரத்திற்குதிறந்து விடப்படும் என்று தெரிய வருகிறது.

இந்தச் சாலையை சீனப் பொறியியல் நிபுணர்கள் அமைத்துள்ளனர். இந்தச் சாலை அமைப்பின் காரணமாக மீண்டும் நவசீனா, தன் வாணிபத் தொடர்பை திபெத்துடனும், காஷ்மீரத்துடனும்ஏற்படுத்திக் கொள்ளக்கூடும்.

ஏற்கனவே லாசா தலைநகரிலிருந்து இரண்டு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இரயில் பாதை அமைப்புக்கான 'துப்புரவு'ம் முடிவு பெற்றுள்ளதாம்.

இனி திபெத்திற்கு இந்தியாவை விட சீனாவுடன் அதிகப் பொருதாரத் தொடர்பு ஏற்படக்கூடும்.

நிலவரி வசூலிக்க

பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம்

நிலவரியை வசூலித்துத் தர பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக, மத்திய அரசாங்கம் ஒரு திட்டம் தயாரித்து வருகிறதாம்.

வரி வசூலில் 15 சத விகிதத் தொகை பஞ்சாயத்துக்களுக்குத் தரப்படக்கூடும் என்று தெரிய வருகிறது.

வெளி நாடுகளில் 50 இலட்சம் இந்தியர்கள்

சிங்கப்பூர், செப். 6—

இந்தியாவுடன் பண்டைத் தொடர்புகொண்ட இந்திய மக்கள் 50 இலட்சம் பேர் வெளிநாடுகளில் உள்ளனராம். 'அவர்கள் எங்கு வாழ விரும்புகின்றனரோ அந்த இடத்தில் உரிமைகளைப்பெற தொடர்புகொள்ள வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கூறியுள்ளதாம்.

டாடா நிறுவன இயந்திரங்களை வாங்கியதில் ஊழல்:

'முதலில் அறிவிக்கப்பட்ட விலை உயர்ந்தும் தாழ்ந்தும் சென்ற விந்தை'

'அதன் விலை நாட்டில் பலரை அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது'

மக்கள் சபையில் பெரோஸ் காந்தி கண்டனம்

டாடா நிறுவன இரயில்வே இயந்திரங்களை வாங்குவதற்குச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்தும், இறக்குமதி செய்வதைவிடக் கூடுதலான விலை தந்த விபரீதம் பற்றியும், மக்கள் சபையில், பெரோஸ் காந்தி கண்டித்துப் பேசிய உரையின் முற்பகுதி முன்னைய இதழில் வெளிவந்துள்ளது ; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

உடன்படிக்கையின் வரலாற்றை எடுத்துரைக்கையில் பெரோஸ் காந்தி கூறியதாவது :-

"நாம் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு 1947-ல் கோலாகலத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில், இந்த எழுத்து மூலமான உடன்படிக்கைப் பத்திரங்களில் இரயில்வே நிறுவனத்தில் இருந்த யாரோ ஒருவர் கையொப்பமிட்டு, 1945 முதல் அதை அமுலாக்கி விட்டார். அந்தக் காலத்திற்கும் இந்த அரசாங்கம், இதன் காரணமாக பொறுப்பேற்க வேண்டியதாயிற்று.

"இயில்வே இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான காலத்தையும் அந்த உடன்படிக்கையில் திணிக்கப்பட்டுள்ளது. 1945 ஜுன் முதல் 1946 ஜுன்வரை முதல் காலமாகவும், 1946 முதல் 1947 வரை இரண்டாவது காலமாகவும் நிர்ணயிக்கப்பட்டது. இயந்திரங்களுக்கான கருர் விலையும் அந்தந்தக் காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் கழித்து—1957 ஆகஸ்டு திங்கள் 20-ம் நாள்வரை—ஒரே ஒரு இயந்திரத்தை மட்டுமே அந்நிறுவனம் தயாரித்துத் தந்துள்ளபோது, இந்த தஸ்தாவேசுகளில் எவ்வாறு கையொப்பமிடப்பட்டது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த 'டெல்கோ' நிறுவனம் இரயில்வே இயந்திரங்களையும், நீராவி இயந்திரங்களையும் தயாரிக்குமாறு பணிக்கப்பட்டது; ஆனல், சாதாரணமாக அதை அந்த நிறுவனம் நிறைவேற்றத் தவறிவிட்டது என்றே கூறவேண்டும். இருந்தும், 'அபிவிருத்திக் காலம்' என்று சொல்லப்பட்டதும் நீடித்துக் கொண்டே சென்றுள்ளது; இதனல் அரசாங்கத்திற்கு அதிகப் பொருள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

"உதாரணத்திற்குக் கூற வேண்டுமானல், 1946 ஜுன் திங்களுக்குள் இந்த உடன்படிக்கையின்படி 50 நீராவி இயந்திரங்களை இந்த நிறுவனம் உற்பத்தி செய்திருக்க வேண்டும். நடைமுறையில் எட்டு ஆண்டுகள் கழித்து 1954-ல்தான் இந்த உடன்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது."

தொடர்ந்து அவர் பேசுகையில், 1950-ல் ஆஜ்மீரில் இருந்த இரயில் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையைப் பற்றிய சில உண்மைகளை அம்பலமாக்கி, மேலும் குறிப்பிட்டதாவது :—

"டெல்கோவில் இயந்திர உற்பத்தி வேலை துவங்குவதற்கு முன்னரே அவசரப்பட்டு, ஆஜ்மீரில் 54 ஆண்டுகளாக இரயில்வே இயந்திரங்கள் உற்பத்தி செய்வதில் சிறப்புடன் விளங்கிவந்த தொழிற்சாலையை மூடிவிட்டனர்.

"'டெல்கோ'வில் தயாரிக்கப்பட்ட நீராவிக் கருவிகள், ஆஜ்மிருக்கு அனுப்பப்பட்டு இரயில்வே இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன என்பதை அறிய வியப்பாக இருக்கும்.

"இரயில் இயந்திரத் தயாரிப்பு இந்தியாவுக்குப் புதிதல்ல; 1896-ம் ஆண்டிலேயே இந்தியாவில் முதல் இரயில்வே இயந்திரம் தயாரிக்கப்பட்டது; தொடர்ந்து ஆஜ்மீரில் 450 இரயில்வே இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம், இதற்குப் பின்னரே ஆஜ்மீர் இரயில்வே இயந்திர உற்பத்தியைச் சாகடித்தது.

"ஆஜ்மீரில் மலிவான விலையில் இயந்திரங்கள் கிடைத்தன; இருந்தும், இரயில்வே அமைச்சர் இலாகா ஏன் அவசரப்பட்டு, 'டெல்கோ'வில் இயந்திர உற்பத்தி துவங்குவதற்கு முன்னரே ஆஜ்மீரில் இரயில்வே இயந்திர உற்பத்தித் தொழிலை நிறுத்திவிட்டது என்பது புரியவில்லை?"

தொடர்ந்து அவர் பேசுகையில் இந்தத் தகராறைக் காப்பு குழுவின் முடிவிற்கு விடப்பட்டதைக் கண்டித்து மேலும் கூறியதாவது :—

"'டெல்கோ'விற்குச் சாதகமாக—வாரீசாக இந்த காப்புக் குழு விளங்கியுள்ளது. வெளி நாட்டுப் போட்டியைத் தடுப்பதைவிட, சித்தரஞ்சன் இயந்திரத் தொழிலைப் பாதிக்கும்வகையில் செயல்பட்டுள்ளது.

"'டெல்கோ' நிறுவனத்திற்கு ஒதுக்கப்படும் தொகையைக் குறைக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை. என்னுடைய அச்சமெல்லாம், அதிக விலை பற்றியே! நம்முடைய நாடு ஏழ்மை நிலையில் உள்ளது; இவ்வளவு அதிக விலையில், அபிவிருத்தியை நாம் தாங்கக்கூடியவர்கள் அல்ல !

"இந்திய அரசாங்கம் மானியமாக ரூ. 2.29 கோடி 'டெல்கோ'விற்கு அளித்துள்ளது. 'டெல்கோ' தயாரிக்கும் இயந்திரத்திற்குச் செலவிடும் தொகைக்கும், இறக்குமதி செய்யப்படும் இயந்திரத்திற்கும் உள்ள மாற்றத்தை ஈடுசெய்யவும் இந்தத் தொகை தரப்பட்டுள்ளது. இதைத் தவிர, இரயில்வே நிறுவனம் வேறு ரூ. 7 இலட்சம் தாராளமாக அதிகப்படியாக வழங்கியுள்ளது. மேலும், குறித்த காலத்தில் இயந்திரங்கள் தயாரித்துத் தராத காரணத்தினல் வசூலிக்கப்படவேண்டிய அபராதத் தொகையான ரூ. 12·51 இலட்சத்தையும் இரயில்வே நிறுவனம் தள்ளிவிட்டுள்ளது. 1945-ல் 'டெல்கோ' நெறியாளர், 'இயந்திர உற்பத்தித் திட்டத்திற்குப் போதிய பணம் இல்லை' என்று அறிவித்தபோது, இந்திய அரசாங்கம் தன் பங்காக ரூ. 2 கோடி தந்துள்ளது; பீகார் அரசாங்கம் ரூ. 75 இலட்சம் வீடு கட்டும் திட்டத்திற்குத் தந்துள்ளது; வட்டியின் பெயரால் ரூ. 4·47 இலட்சம் தரப்பட்டுள்ளது; மொத்தம் ரூ. 5 கோடி அளவிற்குப் பெரிய தொகை தரப்பட்டுள்ளது.

"இவ்வளவு பெரியதொரு தொகையான பொதுமக்களின் பணத்தை இரயில் இயந்திர உற்பத்திக்காக 'டெல்கோ' நிறுவனத்திற்கு அளித்துள்ளதை இது காட்டுகிறது.

"'டெல்கோ' தயாரிக்கும் இயந்திரத்தின் விலை என்ன என்று கருதுகிறீர்கள்? அதன் விலை, நாட்டில் பலரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அதிகமாக திகைத்தவர்கள் என்னைத்தவிர வேறுயாரும் இலர்.

"1956 மே 7-ந் தேதியன்று இச்சபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இரயில்வே அமைச்சர் பதிலளிக்கையில், '1954—55-ல் ஒரு இரயில்வே இயந்திரத்தின் விலை ரூ.6,54,544' என்று குறிப்பிட்டார். 'இந்த விலை அதிகம் என்று அரசாங்கம் அப்போது கருதியது. விலை அதிகம் என்று கருதியதற்குக் காரணம், அபிவிருத்திக் காலத்தில் இயந்திரத்தின் விலை ரூ. 5,82,000 ஆக இருந்ததே! எனவே, இந்தப் பிரச்சினை, விலை நிர்ணயக்காப்புக் குழுவிற்கு விடப்பட்டது. ஆனல் இரயில்வே நிறுவனத்தின்மூலம், காப்புக் குழுவிற்கு 'டெல்கோ' நிறுவனம், 'ஒரு இயந்திரத்தின் விலை ரூ. 7,20,000 என்று அறிவித்துவிட்டது.

"ஏற்கனவே அதிகம் என்று கருதப்பட்ட விலை, எப்படி மேலும் அதிகப்படுத்தப்பட்டு காப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது என்பது தெரியவில்லை? இது என்னைத் திடுக்கிட வைத்துள்ளது.

"'டெல்கோ' நிறுவனம் நாட்டின் ஒரு பெரிய தொழில் அதிபரால் நடத்தப்படுகிறது. அவருக்கு என் மதிப்பு எப்போதும் உண்டு. ஆனல், இத்தகைய நிறுவனம் தரும் முதல் விலை அறிவிப்பு, முடிவான-மாற்றமில்லாத கடைசி விலையாக இருக்க வேண்டும்.

"இரயில்வே நிறுவனத்திற்கு, இயந்திரத்தின் விலை ரூ. 6,54,544 என்று அறிவித்த பின்னர், காப்புக் குழுவிற்கு, 'இயந்திரத்தின் விலை ரூ. 7,20,000 என்று எவ்வாறு அறிவிக்கப்பட்டது என்பது என்னைத் திடுக்கிடவைக்கிறது. மூன்றாவதாக இறுதி விலை ரூ. 6,45,000 என்று இரயில்வே நிறுவனத்திற்கும், காப்புக் குழுவிற்கும் அறிவிக்கப்பட்டது. விலை உயர்ந்துகொண்டும் தாழ்ந்துகொண்டும் இருந்துள்ளது.

"விலைக் காப்புக் குழு செய்ததென்ன என்பதை உறுப்பினர்கள் கவனிக்கவேண்டும். ஒரு இயந்திரத்தின் விலையை அக்குழு ரூ. 6,90,000 என்று நிர்ணயித்துள்ளது !

"'டெல்கோ' இரயில்வே இயந்திரங்களின் விலை அதிகமாக இருப்பதற்குக் காரணம், ஆரம்பத் தேய்மானமும், சாதாரணத் தேய்மானமும் இரட்டிப்பாக உள்ளது என்று கூறப்படுகிறது. விலைக் காப்புக் குழு இதைப் பற்றி ஆராயவில்லை. இரயில்வே நிறுவனம் உடன்படிக்கையை மீறி ரூ. 1·14 கோடியை 'அபிவிருத்தி காலத்'தில் இந்தத் தொழிலுக்கு ஆரம்பத் தேய்மானமாகவும், சாதாரணத் தேய்மானத்திற்கு இரண்டு பங்காக—ரூ. 1·14 கோடியும் செலவிட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்கு உடன்பாட்டில் இடமில்லை. இயந்திரத்தின் விலையுடன் தேய்மானத் தொகையைச் சேர்க்கக்கூடாது. இந்தத் தவறை மத்திய அரசாங்க ரெவின்யூ இலாகா, இரயில்வே நிறுவனத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளது. இருந்தும், இரயில்வே நிறுவனம் அதைப் பொருட்படுத்தாமல் ரூ. 1·14 கொடுத்துள்ளது.

"'டெல்கோ' நிறுவனம் இந்தத் தொகையை, இயந்திர உற்பத்திக்குச் 'செலவிடவில்லை; மாருக, விவசாயத்திற்குத் தேவைப்படும் இயந்திரங்களையும், நீராவி இயந்திரங்களையும் தயாரிக்க முதலீடு செய்துள்ளது.

"இந்த ரூ. 1·14 கோடியை இரயில்வே நிறுவனம், நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக—வரம்புக்கு மீறி செலவிட்டுள்ளது என்று பொதுத் தணிக்கைக் குழுவும் இரயில்வே நிதி ஆணையாளரும் கண்டித்துள்ளனர்

"எதிர்காலத்தில், இரயில்வே இயந்திரங்களை 'டெல்கோ' நிறுவனம் தரும்போது; அதிகப்படியாகச் செலுத்திய தொகையை சிறு சிறு தொகைகளாகப் பிடித்துக்கொண்டு ஈடுசெய்ய இரயில்வே அமைச்சர் முயற்சிக்க வேண்டும்."

அமைச்சரின் பதில்

ஒப்பந்தம் செய்யப்பட்டகாலத்தில் தான் இரயில்வே அமைச்சராக இல்லாத காரணத்தால் தன்னல் சரியான முறையில், சில விஷயங்களுக்குத் தெளிவான விளக்கம் தரமுடியவில்லை என்று விவாதத்திற்குப் பதிலளித்த இரயில்வே அமைச்சர் தெரிவித்தார்.

'டெல்கோ' தயாரித்துத் தந்துள்ள இயந்திரங்களின் விலை அதிகமென்பதையும், மலிவான விலையில் அவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்திருக்கலாம் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

இப்போது அமுலில் உள்ள உடன்பாடு 1958 ஏப்ரல் திங்களுடன் முடிவடைவதால், அடுத்து செய்துகொள்ளப்படும் ஒப்பந்தத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த நற்கருத்துக்களை மனதில்கொண்டு ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும்என்றுதெரிவித்தார்

'டெல்கோ' நிறுவனத்தில் உள்ள, குறைபாடுகளை நிர்வாகி அறிவித்துள்ளதாகவும், தொழிற்சாலையின் இயந்திர ஆற்றலையும், உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் முழு உழைப்புச் சக்தியையும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாத நிலையை முக்கியமாகச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் இரயில்வே அமைச்சர் அறிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்ட ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், 'டெல்கோ' தொழிற்சாலையை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்று கூறிய யோசனையை இரயில்வே அமைச்சர் நிராகரித்து விட்டார்; அதற்கான எந்தவித காரணத்தையும் அவர் காட்டவில்லை. 1952-ம் ஆண்டில் பொதுக் கணக்கு தணிக்கைக்குழு அறிவித்த—தேசிய மயமாக்கும் யோசனைக்கு, இந்திய அரசாங்கம் தன் கருத்தை அப்போதே தெரிவித்துள்ளதாம்.

'நீதிக் கட்சியினர் காலத்தில் சிறந்த பாராளுமன்ற முறை இருந்தது'

'பதவி ஆசையற்ற பண்பாளர் சர் தியாகராயர்'

சர் சி. பி. இராமசாமியின் பழைய நினைவுகள்

1903 முதல் **1957** வரை பல சட்டமன்றங்களில் பணியாற்றிவரும் சர் சி. பி. இராமசாமி அவர்கள் 'பண்டைய பாராளுமன்ற உறுப்பினர்'கள்பற்றி 'மேயில்' இதழில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து திரட்டப்பட்ட கருத்துக்கள் இங்கு தரப்படுகிறது :—

"1920 முதல் 1927 வரை நான் சென்னை சட்டசபை உறுப்பினனுக இருந்தபோது பாராளுமன்ற முறைகளைக் கண்டறிந்த பலருடன் பழக நேரிட்டது.

"நல்ல பாராளுமன்ற முறையைக் கற்றிராத பலர் அந்தச் சபையில் இருந்தனர்; அவர்களில் முதல்வர் சர் தியாகராய செட்டியார் ஆவார். அரசியலில் எனக்கும் அவருக்கும் மாறுபாடு இருப்பினும், அவர் எங்கள் குடும்பத்திற்குப் பிடித்தமான உற்றார் என்ற நிலையில் பழகியுள்ளார். இந்தப் பண்பை நானும், எனது உறவினர் குமாரசாமி சாஸ்திரிகளும் கண்டுகளித்து, சர் தியாகராயரைப் பாராட்டியும், மதித்தும் வந்துள்ளோம். அரசியல் வேறுபாடுகளை நாங்கள் பொருட்படுத்தாமலே பழகிவந்தோம்.

"பதவி கூடாது; சலுகைகள் கூடாது என்று மக்கள் எண்ணத் துவங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே சர் தியாகராயர், அந்தக் கொள்கை அடிப்படையில் செயலாற்றினர். தீவிரமாகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவார்; ஆனல், பதவி ஆசையே அவருக்கு இருந்ததில்லை.

"எனக்கு நன்ருக நினைவிருக்கிறது; சென்னை அரசாங்கம் அவரை, பலமுறை கட்சித் தலைவராகப் பதவி எற்குமாறு மன்றாடிக் கேட்டுள்ளது. அப்பொழுது சட்டசபையில் பெருவாரியான உறுப்பினர் நீதிக் கட்சியைச் சேர்ந்தவர்களேயாவர். அவர் நீதிக் கட்சியின் தலைவர்; அவரே சட்டசபைக் கட்சித் தலைவராகப் பதவியேற்பதைத்தான் எவரும் எதிர்பார்க்கக்கூடியதாகும்.

"ஆனல் அவர், 'பதவியும் வேண்டாம்; அரசாங்கத்தின் ஆதரவும் தேவையில்லை' என்று கூறிவிட்டார்; அதை எழுத்து மூலம் அவர் உறுதியாகக் குறிப்பிட்டும் அறிவித்துவிட்டார்.

"'மற்றவர்கள் பொறுப்பை ஏற்று நடத்தட்டும்; நான் வெளியில் இருந்துகொண்டே ஆய்வுரைகளையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்' என்று கூறியவர் சர் தியாகராயர்!

"அவர் பதவிக்குவா விரும்பாத காரணத்தினல் பானகல் அரசர் முதலமைச்சர் பதவியை ஏற்ருர்; அவருக்கு உதவியாக சர் ஏ. பி. பாத்ரோ, கே. வெங்கடா ரெட்டி ஆகியோர் இருந்து வந்துள்ளனர். இன்றைய மருத்துவ இலாகா, பானகல் அரசருக்கு அதிகம் கடமைப்பட்டுள்ளது. அவரும், சர் தியாகராயரைப் போலவே சட்டசபையில் அதிகம் பேசமாட்டார்.

"பேசவேண்டிய அவசியம் நேரும்போது, சுருக்கமாக-தெளிவாக அவர்கள் பேசுவார்கள்; மற்றவர்களுக்குப் பேச நல்ல வாய்ப்பு அளித்தனர். அவர்களுடைய பெருந்தன்மையும், அறிவாற்றலும் வெகுவாகப் பாராட்டத்தக்கவையாகும்.

"நானும், சர் ஏ. இராமசாமி முதலியாரும், விவாதநேரத்திலும் சரி, கொள்கைகளை விளக்கும் போதும் சரி, தீவிரமான தாக்குதலில் ஈடுபடுவோம்; நான் கூறுவதை அவர், 'நாட்டுக்குக் கேடு பயக்கும்' என்று ஆவேசமாகப் பேசுவார்; ஆனல், பேச்சு முடிந்ததும் நாங்கள் எப்போதும்போல சந்திப்போம்; அளவளாவி மகிழ்வோம்."

இந்தியப் பேரரசின் அவலநிலை

வெளிநாட்டில் 'மடிப் பிச்சை' எடுத்து திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்களாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியத் துணைக்கண்டத்தைத் தொழில் மயமாக்கும் அடிப்படை நோக்கத்துடன் மொத்தம் ரூ. 4,800 செலவில் தீட்டப்பட்டது. இந்தப் பேராசைத் திட்டத்திற்குப் பணம் இல்லை என்பதும், இத்திட்டத்தை நிறைவேற்ற பேரரசு திண்டாடுகிறது என்பதும், திட்டத்தின் வெற்றி அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதவியைப் பொறுத்துள்ளது என்பதும் இப்பொழுது தெரியவருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறைக்கப்பட்டும், திருத்தப்பட்டும்கூட, திட்டத்தை நிறைவேற்ற கண்டிப்பாக ரூ. 4,800 கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக இந்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி நிதிக் குழுவினரிடமும், திட்டக் குழுவினரிடமும் தெரிவித்துள்ளார். திட்டத்தைத் திட்டியபடியே நிறைவேற்ற ரூ. 5,500 கோடி தேவைப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று திட்டத்திற்கான நிதி வசதியை தன்னால் பெறமுடியும் என்று அவர் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

திட்டம் குறைக்கப்பட்டதற்கும், திருத்தி அமைக்கப்பட்டதற்கும் காரணம், விலைவாசிகள் உயர்ந்துள்ளதும், பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்திருப்பதும் தானாம்!

நிலக்கரி, எஃகு, போக்குவரத்து, இரயில்வே, மின்சாரம் போன்ற அடிப்படைத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி வசதி, எப்படியும் முதலில் ஒதுக்கப்படுமாம்.

அந்நியச் செலாவணியைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாம்.

உள்நாட்டில் வரி விதிப்பின் மூலமும், சிறு சேமிப்புத் திட்டம் மூலமும் நிதி வசதியை அரசாங்கம் அதிகரித்துக்கொள்ளுமாம். தனியார் துறையில் எதிர்பார்த்த சூழ்நிலை உருவாகவில்லையாம். கடன் தொகைகளை நம்பியே தனியார் துறை இயங்குகிறதாம். நாட்டில் நிறைய பணம் முடங்கியுள்ளதாம்.

அதே கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய திட்ட அமைச்சர் நந்தா, பல்வேறு காரணங்களால், இப்போதைய திட்ட மதிப்பீடான ரூ. 4,800 கோடிக்கு மேல் ரூ. 700 கோடி அதிகரிக்கலாமென்றும், திட்டத்தை எதை எதை முன்னால் நிறைவேற்றுவது என்பதை முடிவுசெய்ய திட்டக் கமிஷனும் சர்க்காரும் பரிசீலித்துவருவதாகவும் கூறினார்.

குந்தா திட்டத்திற்குக் கனடா உதவி

ஐதராபாத், செப். 7—

நீலகிரி மாவட்டத்தில் உருவாக்கப்படும் குந்தா நீர்விசை மின்சாரத் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்களை வழங்குவதற்கு கனடா முன்வந்துள்ளது.

இந்த இயந்திரங்களின் மதிப்பு ரூ. 10 கோடி என்று திட்டக் குழுவின் துணைத் தலைவர் கிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

'திட்டத்தை மீண்டும் ஆராய வேண்டும்'

ரிசர்வ் பாங்கியின் கருத்து

பம்பாய், செப். 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மீண்டும் தீவிரமாகவும், உடனடியாகவும் ஆராய்ந்து தனியார் துறைத் திட்டங்களையும், அரசாங்கத் திட்டங்களையும் மதிப்பிட்டாகவேண்டும் என்று ரிசர்வ் பாங்கி தெரிவித்துள்ளது.

நிதி வசதி இல்லாத நெருக்கடி நிலையும், விலைவாசிகள் உயர்ந்து வருவதுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் அந்நிய நாடுகளின் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் திட்டம் தீட்டப்பட்டதாம். முதல் ஆண்டிலேயே சாதகமான சூழ்நிலை வெளிநாடுகளில் காணப்படவில்லையாம். வெளிநாடுகளில் இந்தியாவின் இருப்பு, அளவுக்கு மீறி குறைந்து வந்துள்ளதாம்.

ஆந்திரத் திட்டத்தில் மாறுதல் இராதாம்!

ஐதராபாத், செப். 9—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் ஆந்திர மாநிலத் திட்டத்தில் எந்தவித மாறுதலும் இருக்காது; ஆனால், அடுத்துவரும் ஆண்டுகளைப்பற்றி நான் ஒன்றும் முன்னறிவிப்பாகக் கூறுவதற்கில்லை"

என்று திட்டக்குழுத் துணைத் தலைவர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு நிறைவேற்றப்படவேண்டிய திட்டத்தில் மட்டும் காலதாமதம் ஏற்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அகில இந்திய அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் பெறற திட்டங்களை ஒன்றின்பின் ஒன்றாகக் கவனித்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிக்கு அனுமதி தரப்படுமாம்.

அந்நிய செலாவணியில் உள்ள பற்றாக்குறை அவலநிலையே இதற்குக் காரணமாம்!

'திராவிட நாடு'

மலையாளம் (மாதமிருமுறை)

தனிப் பிரதி [illegible] அணா 2.

★

இதழை சென்னை நகரில் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை. பிரதி ஒன்றுக்கு நாலணா முன்பணம் கட்டவேண்டும்.

1—9—57 இதழ் வெளிவந்துவிட்டது

விபரங்களுக்கு :— நிர்வாகி: 'திராவிட நாடு'
திராவிட பப்ளிஷிங் சொசைட்டி, தம்பானூர், திருவனந்தபுரம்-1

அண்ணா

சுற்றுப்பயணம்

செப்டம்பர்
11 : காலை—அனந்தம்பேட்டை
பகல்—எலந்தங்குடி
12 : காலை—கள்ளக்குறிச்சி
மாலை—வேலூர்
14 : மாலை—சுப்பிரமணியபுரம்
16 : கா[illegible]—காஞ்சிபுரம்
18 : மாலை—கீரனூர்
இரவு—புதுக்கோட்டை
19 : மாலை—திட்டச்சேரி
20 : மாலை—சின்னதாராபுரம்
21, 22 : திருவண்ணாமலைமாநாடு

குடிசைவாழ் மக்களுக்கு ஏற்பட்ட துயரம்

சென்னை, செப். 9—

சென்னை யானைகெவுனிபக்கம் 250 குடிசைகள் தீக்கிரையாகிவிட்டன. தீயணைக்கும் படை வந்து தீயை அணைத்துள்ளது. மொத்தம் ரூ. 15,000 மதிப்புக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாம். இந்த விபத்திற்குக் காரணம் தெரியவில்லையாம்!

தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி

ஆகஸ்டு 24-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி, மாறுதல் எதுவுமின்றி 373-லேயே இருந்தது.

முருகூர் கழகத் தோழர்கள் விடுதலை

போலீசார் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

முருகூர், சேப். 8—

திருச்சி மாவட்டம் முருகூரைச் சேர்ந்த தி. மு. கழகத் தோழர்கள் மூவர்மீது போலீசாரால் தொடரப்பட்ட வழக்கில் கழகத் தோழர்கள் குற்றவாளிகள் அல்லர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

பொதுத் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு (23—2—57 அன்று) இவ்வூர் காங்கிரஸ்காரர்களால் செய்யப்பட்ட தவறான புகார்களைக்கொண்டு, இளமுருகு, முத்தையா, முத்துசாமி என்னும் மூன்று தோழர்கள்மீது போலீசார் இ. பி. கோ. 147, 323, 448 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு சுமார் 6 மாதங்களாக முசிறியிலும், துறையூரிலும் விசாரிக்கப்பட்டு, 29-8-57 அன்று துறையூர் எக்சிகியூடிவ் மாஜிஸ்திரேட் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

கழகத் தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் வி. கிருட்டினசாமி அவர்கள் வாதாடினார்; உழவர் முன்னேற்றச் சங்கத் தலைவர் தோழர் மு. கருப்பையா உடனிருந்து உதவிகள் பல புரிந்தார்.

ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கான சபா (Regd.) சென்னை-1.

10—9—57 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு
ராஜா அண்ணாமலை மன்றத்தில்
எஸ். எஸ். ராசேந்திரன் நாடக மன்றம் அளிக்கும்

"மணி மகுடம்"

நடிகர்கள்: எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி மற்றும் பலர்.

டிக்கெட்டுகள் : ரூ. 10, 5, 3, 2 & 1.

செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து அண்ணாமலை மன்றத்தில் டிக்கெட்டுகள் விற்கப்படும்

13—9—57—ஈ. வி. சரோஜா—நடனம்

கல்லலில் தீ விபத்து

தொகுதி எம். எல். ஏ.-க்கு வேண்டுகோள்

காரைக்குடி தொகுதி கல்லல் பிர்க்காவைச் சேர்ந்த சாத்தரசன் பட்டி கிராமத்தில் 28—8—57 இரவு 9 மணிக்கு பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. பதினைந்து விவசாயிகளின் குடும்பங்கள் வீடிழந்தனர்; எட்டு வீடுகள் கருகிச் சாம்பலாயின; ரூ. 8,000 விலை மதிப்புள்ள பொருள்களும், நெல்மணிகளும், விலைமதிக்க முடியாத தமிழ் மருத்துவச் சுவடிகளும் வெந்து பாழ்பட்டன.

இப்பகுதி மக்கள் இத்தொகுதி எம். எல். ஏ; ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களை இத் தீ விபத்தால் வீடிழந்தோருக்கு அரசாங்கத்திடம் தக்க நிவாரணம் தேடித்தருமாறு கேட்டுக்கொள்கின்றார்கள்.

சிதம்பரம் வட்ட தி. மு. கழகச்

செயற்குழு உறுப்பினர்கட்கு :

11—9—57 மாலை 4 மணியளவில் சிதம்பரம் வட்ட தி.மு. கழக செயற்குழுக் கூட்டம் புவனகிரி கடைத்தெருவிலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும். விவசாய முன்னேற்றச் சங்க அமைப்பு; புதிய கிளைகள் நிறுவுதல்; நிறுவிய கிளைகளைப் பதிவு செய்தல், வட்டச் செயற்குழுவுக்குப் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்தல், மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

பந்தநல்லூரில் என். எஸ். கே. அனுதாப ஊர்வலம்

10—9—57 மாலை 5 மணிக்கு பந்தநல்லூர்பட்டி மைதானத்திலிருந்து நெய்க்குன்னம் தோழர் நா. செல்வதுரை தலைமையில் கலைவாணர் என். எஸ். கே. அனுதாப ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியே பூங்காவை அடையும்.

அண்ணா

அவர்களுக்கு சுப்பிரமணியபுரம் ஊராட்சிமன்ற வரவேற்பு

14—9—57-ல் வருகை தரவிருக்கும் அண்ணா அவர்களுக்கு, சுப்பிரமணியபுரம் (அறந்தாங்கி வட்டம்) ஊராண்மைக் கழகச் சார்பில் ஓர் வரவேற்பளிக்க வேண்டுமென மேற்படி ஊராண்மைக் கழகத் துணைத் தலைவரும், தி. மு. க. உறுப்பினருமான தோழர் கே. எஸ். காசிநாதன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், ஊராண்மைக் கழகக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கீரனூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

10—9—57 மாலை, மதுரை மாவட்டம் கீரனூர் தி. மு. கழகப் பணிமனையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

முகவரி மாற்றங்கள்

கழகப் பாடகர் தோழர் சேலம்-சீனிவாசன் அவர்களோடு தொடர்புகொள்கிறவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது:—

H. V. சீனிவாசன்,
c/o N. செயராமன்,
30, கிடங்குத் தெரு,
சென்னை-1.

★

G. பராங்குசம்,
F 73/2, பொன்மலை.

★

கோ. செங்குட்டுவன்,
3-A, புதுத்தெரு,
குயப்பேட்டை— சென்னை-12.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க.

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம்வட்டம்)

—நிர்வாகி : 'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 8/57

திராவிட நாடு விடுதலை வாரம்

செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பன்,

4—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.